| O.S.No. 406/2021 | PW2 : திரு. ராமதாஸ்<br>த/பெ. திரு. கிருஷ்ணமூர்த்தி | 07-07-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>1–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. வாதி செல்வம் எனது சித்தப்பா. நான் செங்கம்பூண்டியில் வசிக்கிறேன். தாவா சொத்தின் சர்வே எண் ஞாபகமில்லை, அதன் விஸ்தீரனம் 12 சென்ட் ஆகும். தாவா சொத்து எந்த இடத்தில் உள்ளது என்று எனக்கு தெரியும். செங்கம்பூண்டியிலிருந்து மேல்குவளைவேடுவுக்கு எங்கள் ஊரில் ரோடு உள்ளதா என்றால் அவ்வாறு ரோடு இல்லை. அந்த ரோடு 55 வருடமாக பயன்பாட்டில் உள்ளது என்றால் சரியல்ல. கழனியின் மீது ஒரு 7 அடியில் பாதை செல்கிறது. அதைத்தான் பொதுமக்கள் நடைபாதையாக பயன்படுத்துகிறார்கள்.

2. செங்கம்பூண்டியிலிருந்து மேல்குவளைவேடுக்கு 55 வருடங்களாக ரோடு உள்ளது என்றாலும், அதனை பொதுமக்கள் பயன்படுத்தி வருகிறார்கள், என்னை எனது சித்தப்பா அழைத்து வந்ததன் அடிப்படையில் வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ரோடு அரசாங்க பதிவேட்டில் உள்ள விவரம் தெரியுமா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. வாதியின் இடத்தை ஆக்கிரமிக்க முயற்சி செய்கிறார்கள் என்று எனது பிரமாண வாக்குமூலத்தில் பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே இருக்கின்ற சாலையை இல்லை என்று வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்துக்கு பக்கத்தில் எனக்கு நிலம் ஏதும் இல்லை. என் சித்தப்பா தாக்கல் செய்த

பொய் வழக்கிற்கு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.07.07 19:38:48 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**